Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 298 of 2018**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.7**

Defence

Court

| | |
|---|---|
| Name | டாக்டர் தனலட்சுமி |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 3rd day of March 2026.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 3rd day of March 2026.**

**2 வது எதிரி இளஞ்சிறார் நீதிமன்றத்தில் உள்ளார். 5 மற்றும் 6வது எதிரி இறந்து விட்ட காரணத்தினால் குற்றம் அற்றுபோய் விட்டது. 3வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. 1 மற்றும் 4 வது எதிரி ஆஜர்.**

**(சாட்சியை அரசு தரப்பு வழக்கறிஞர் அடையாளம் காட்டினார்)**

**முதல்விசாரணை:**

நான் தமிழக அரசில் அரசு மருத்துவராக பணிபுரிந்து கடந்த 2025 ஆம் ஒய்வு பெற்று விட்டேன். நான் கடந்த 2017 ஆம் வருடம் குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது 18.05.2017 அன்று அதிகாலை 12.00 மணியளவில் அருண்குமார் வயது -48, தந்தை பெயர் T.G.பழனி என்பவரை அவருடைய மனைவி லட்சுமி என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை அடையாளம் தெரியாத 4 நபர்கள் 17.05.2017 அன்று இரவு 10.40 மணியளவில் கத்தியால் தாக்கியதாக நெய்வேலி மெயின் ரோடு, லிங்கன் மெடிக்கல்ஸ் முன்புறம் அவரை கத்தியால் தாக்கியதாக கூறினார். அப்போது அவரை நான் பரிசோரித்த போது சுயநினைவுடன் காணப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் ஆழமான வெட்டுக்காயம் L Shape 8cm x8cm இடது பக்க மண்டையில் காணப்பட்டது. அவரது மண்டையோடு 5cm x 4cm அளவில் திறந்து இருந்தது. மூளை வெளியே தெரிந்த நிலையில் இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து காயத்திற்கு கட்டுப்போட்டு கடலூர் அரசு மருத்துவமனைக்கு நுண்கதிர் படம் தலைக்கு எடுக்கவும், மூளைக்கு CT brain எடுக்கவும் பரிந்துரை செய்து அனுப்பி வைத்தேன்.

பிறகு 25.07.2017 அன்று அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை ஆவணங்கள் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்டக் காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். **நான் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் உடன் இணைந்த காயச்சான்று அதசாஆ 9 ஆகும்.**

மேற்சொன்ன 18.05.2017 அன்று அதிகாலை 12.10 மணிக்கு ரவிச்சந்திரன், வயது 45- த.பெ. ஜெயதேவல் என்பவரை அவருடைய அப்பா என்னிடம் அழைத்து வந்தார். அவரை அடையாளம் தெரியாத 4 நபர்கள் 17.05.2017 இரவு 10.40 மணியளவில் நெய்வேலி மெயின் ரோடு லிங்கன் மெடிக்கல்ஸ் முன்புறம் வடலூரில் கத்தியால் தாக்கியதாக கூறினார். அப்போது அவரை ஒரு தனியர் ஆம்புலன்ஸ்சில் அழைத்து வந்தனர். அவரை பரிசோரித்த போது அவருக்கு நாடி துடிப்பு காணப்படவில்லை. மூச்சு இல்லை, இருதய துடிப்பு கேட்கவில்லை. கண்ணில் உள்ள விழி (பாப்பா) விழிந்த நிலையிலும் அசையாமலும் காணப்பட்டது. அப்போது அவர் இறந்த நிலையில் காணப்பட்டார். அவருக்கு ஏற்பட்டக்காயங்கள்:

ஆழமான வெட்டுக்காயங்கள் ஆறு இருந்தது.

அதில் ஐந்து காயங்கள் பின் மண்டையில் நீள வாட்டத்திலும் ஒன்று படுக்கை வாட்டத்திலும் காணப்பட்டது.

நீள வாட்டத்தில் காணப்பட்ட காயங்களின் அளவுகள் 15cmx5x5cm ஆகும். மூளை பகுதி வெளியே வந்து இருந்தது.

ஆறாவது காயமான படுக்கை வாட்டத்தில் இருந்த காயம் 6cmx2cmx3cm அளவு கொண்டதாக இருந்தது.

வலது கையின் மேல்புரத்தில் கிழிந்தக்காயம் 5cm x1cm x1cm அளவில் இருந்தது.

பிரேதத்தை 12.20 மணிக்கு பிணவறைக்கு அனுப்பி போலிசாருக்கு தகவல் கொடுத்தேன். **நான் வழங்கிய விபத்து பதிவேடு அதசாஆ 10 ஆகும்.**

**எதிரிகள் 1 மற்றும் 3 தரப்புக்கான குறுக்குவிசாரணை:**

அருண்குமார் என்னிடம் பரிசோதனைக்கு வந்த போது சுயநினைவுடன் தான் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட வழக்கு வரலாறு அருண்குமார் தான் என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். ரவிச்சந்திரனின் அப்பா வழக்கு வரலாறு என்னிடம் கூறினார்.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court,*
*read over and interpreted to the Witness.*
*Admitted and acknowledged by him/*
*her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*